**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.277/2024 நாள்- 08.04.2026

பி.வா.சா.3

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்- கோட்டீஸ்வரராவ் | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**<u>முதல் விசாரணை</u>**

நான் IDBI இராஜபாளையம் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். குமாரசாமிராஜா என்பவர் எங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். காசோலை எண்.186909, தேதி : 30.07.2021 வசூலுக்காக வந்த போது குமாராசாமி வங்கி கணக்கில் ரூ.1010310.95/- இருப்பு இருந்தது. அதற்கு முன்பாக காசோலை எண்.186909 கண்ட தொகைக்கு 09.06.2021 அன்று குமாராசாமி ராஜாவால் பணம் வரவு வைக்கக்கூடாது என்று காசோலை தொலைந்து விட்டதாக கூறி Stop payment செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் கொடுத்திருந்தார். அந்த விண்ணப்ப படிவத்தை ஏற்றுக் கொண்டதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் கொண்டு வந்துள்ளேன். அது குமாராசாமி ராஜாவின் வங்கி **கணக்கு மற்றும் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டதற்கான ஆவணம் சா.சா.ஆ.1-** ஆக

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

குறியீடு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

குமாராசாமிராஜாவிற்கு அவரது சேமிப்பு கணக்கிலிருந்து வழங்கப்பட்ட காசோலைகள் அனைத்தும் தொலைந்து விட்டதாக கூறி Stop payment செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் கொடுத்திருந்தாரா என்று கேட்டால் காசோலை எண். 186909 க்கு மட்டும் தான் கொடுத்தார். மற்ற காசோலைகளை பொறுத்து வங்கியில் பணமாக்குவதற்காக வசூலுக்கு வந்ததா என்று கேட்டால் காசோலை எண். 186910 முதல் 186917 வரை காசோலைகள் 2021ம் வருடம் 7வது மாதம் வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டு பணமாக்கப்பட்டுள்ளது. காசோலை தொலைந்துவிட்டது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு எங்கள் வங்கியை விசாரித்தாரா என்று கேட்டால் இல்லை.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.